# 1. சுமந்தேனே சுமப்பாயா..!

## முன்னுரை

**பாவிகள் நம் பாவச்சுவடுகளை தேய்த்தெடுக்க**
**பரமன் பயன்படுத்திய கிருமி நாசினி...**
**இரத்தம்....தன் சொந்த இரத்தம்**
**கழுவப்பட்ட நமக்கு வாழ்வு..**
**கழுவிய அவருக்கோ அந்தோ சிலுவைச்சாவு**
**இதுதான் உலகம்!**

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் பாவச்சேற்றில் ஊறிக்கிடந்த நம் மனித இனத்தை மீட்டெடுக்க கழுவியெடுக்க
இறைவனே மனிதனாய் உருவெடுத்து மாசற்ற மரியின் மகனாய் பிறந்தார் இவ்வுலகில்.
பாவம் தவிர மற்ற அனைத்திலும் மனிதர் போல் வாழ்ந்தார்.
பாவிகள் நம்மை மாற்ற பலவித புதுமைகளையும், புண்ணிய வார்த்தைகளையும் வெளிப்படுத்தி
தன் வார்த்தைகளை வாழ்ந்து காட்டி நாம் புண்ணியர்களாய் வாழ உதவி செய்தார்.
செய்த உதவிகளை அற்புதங்களை அனுபவித்துவிட்ட நாம் அவருக்கு என்ன கொடுத்தோம்...?
பணமா.. பொருளா.. இல்லை நம் உயிரையா..? ஒன்றும் இல்லை. அவரை நன்கு அனுபவித்த
நமக்கு வாழ்வு.. அவருக்கோ அந்தோ சிலுவைச்சாவு..!





நாம் உதவி செய்வோர்க்கு உபத்திரவம் செய்யும் நம் மனித புத்தியைக் காண்பித்து விட்டோம்.

ஆனால் அவர்... உபத்திரவம் செய்தவர்களை உளமாற மன்னித்து, மறந்து

தன் தெய்வீகத் தன்மையைக் காட்டிவிட்டார்.

**மனித இனமே...**

உண்மையில் சிலுவையில் அறையப்பட வேண்டியது யார்?

நாமா..? இயேசுவா..?

மனச்சாட்சியிடம் கேட்டுப்பார்.. விடை கிடைக்கும்.

இறைமகன் பயணித்த கல்வாரிப்பாதை மலர்களால் நிரப்பப்பட்டதென்று எண்ணுகிறாயோ..!

சென்று பார்.. மலர்களா முட்களா என்று உனக்கே தெரியும்..

இந்தப் பயணம் ஒரு இன்பப் பயணமல்ல.. மாறாக துன்பப் பயணம்..!

சிரித்துக் கொண்டு செல்லும் பயணமல்ல..

மாறாக சிந்தித்துக் கொண்டு செல்லும் பயணம்..!

இது கற்களும் முட்களும் நிறைந்த கரடு முரடான பயணம்..!

நாம் பண்ணிய பாவங்களுக்குப் பரிகாரப் பயணம்.. ஆம்..

இதுதான் சிலுவைப்பயணம்..!

பாவமே செய்யாத பரமன் தயாராகி விட்டார்.. சுமைகளோடு பயணிக்க...

பாவம் மட்டுமே செய்த நாம் தயாரா..?... அதே சுமைகளோடு பயணிக்க..!பரமன் இயேசுவுக்கு பழக்கமாகிவிட்டது.. சுமந்து... சுமந்து..!

பாமரன் உனக்கு இது முதல் தடவைதான்...

## இரண்டாம் நிலை

### மனிதனின் பாவ மூட்டைகள் மாபரன் மீது சுமத்தப்படுகிறது..

### பாரச்சிலுவையாய்..

இதோ..

உண்மை பேசியவருக்கு இறுதி ஊர்வலம் ஆரம்பம்...

சிறு பிள்ளைகள் ஏறி விளையாடிய

தோளில் சிலுவை மரம்!

இறைத்திட்டத்தை முழுமையாக்க

மனத்திடம் கொண்டவராய்.. முன் செல்லும் மனிதர்...

வாங்கி உண்ட வயிறுகளெல்லாம்

வழிதோறும் பார்க்கிறது வேடிக்கை..

வழி நெடுக துணி விரித்தவர்களெல்லாம் – இன்று

விழியின்றி நிற்கிறார்கள்..நெடுமரங்களாய்...

கூடவே இருந்தவர்கள் கூக்குரலிட்டு கத்தினாலும்

கேட்காதவர்களாய் வெகு தொலைவில்...

சுமக்கத் தகுதியில்லை...சுமக்கிறார் பரமன்!

சுமக்க வேண்டும் – ஆனால் சுமக்க மறுக்கின்றோம்

நீயும்.. நானும்..சிந்திப்போமா..?

### செபம்

எங்களுக்காகப் பாரச்சிலுவை சுமந்த இயேசுவே! எங்களின் சுய நலத்திற்கு உம்மைப் பலியாக்கிவிட்டதை

நினைத்து மனம் வருந்துகிறோம். இனியாவது,

எங்கள் பாரங்களை பிறர் மேல் சுமத்தாமல், நாங்களே

சுமந்து செல்ல வரம் தாரும்.. ஆமென்.

## மூன்றாம் நிலை

### முதல் எடுப்பே முடியவில்லை...

### முள்முடி மன்னனுக்கு..விழுகிறார் கீழே..

பதம் பார்க்கும் கற்கள் ஒரு புறம்
புயம் அழுத்தும் பாரச்சிலுவை ஒரு புறம்..
பாரம் பலமிழக்கச் செய்துவிட்டது
நிலை தளர்ந்து விழுகிறார் ஈசன்
மறை கழன்று அடிக்கிறார்கள் நீசர்கள்!
தரையும் தலையும் அழுத்தமாய் முத்தமிட
கொப்பளித்து வரும் குருதிகள் முள்முடியால்...
முடக்குவாதமுற்றவனை குணப்படுத்தியவர் – இன்று
முடங்கிக்கிடக்கிறார் எழ முடியாமல்...
இறைத்திட்டம் பாதிக்கட்டத்தில் முடியக்கூடாது என்று
பலம் திரட்டி எழுகிறார் மீண்டும் நடக்க..
வேடிக்கையே வாடிக்கையென
வரிசையில் நிற்கிறது.. வழக்கம் போல்
மக்கள் கூட்டம்.
விழுந்தாலும் எழ நினைக்கிறார் இயேசு
நம்மால் முடியுமா..?.... விழ வைப்பதைத் தவிர..!
சிந்திப்போமா...

### செபம்

அன்பு இயேசுவே! என் பாவங்களால் உம்மை கீழேவிழ வைத்ததற்காக மனம் வருந்துகிறேன். இனியாவது எவரையும் விழ வைக்காது, நற்செயல் புரியும் கருவியாக மாறிட வரம் தாரும்.. ஆமென்.

## நான்காம் நிலை

## தாயின் ஆறுதல்....சேயின் தேறுதல்

வலியினால் விழி பிதுங்கியவரை

வழியில் சந்திக்கிறார் பரமனின் அன்னை!

மகனின் நிலை கண்டு

மனம் பதறுகிறார்... ஆறுதல் கூறுகிறார்...

மகனே...

பத்துமாதம் சுமந்தது நீ

பாரச்சிலுவை சுமக்கத்தானா..

இல்லை... தச்சனால் வளர்க்கப்பட்டதால்

மரம் சுமக்க ஆசையோ..?

பாவம் தவிர வேறு அறியாத இவர்களுக்கு

பாவமே அறியாத நீயா சுமக்கிறாய்...

பார்க்க முடியவில்லை...

பற்றியெரிகிறது என் மனமும்.. வயிறும்..!

இருப்பினும்..

தளர்ந்து விடாதே..!

தந்தையின் திட்டம் முடிவுறும் நேரம்..

முடங்கிவிடாதே... முன்செல்...

முடியும் உன்னால்.

அன்னையின் ஆறுதலை தேறுதலாக்கி

அடி நகர்கிறார் நம் அன்பர் இயேசு.

**அன்னையர்களே...**

பார்த்தீர்களா.. அன்பின் உச்சக்கட்டத்தை ..!

முன் அனுப்ப முடியுமா.. உங்கள் பிள்ளைகளை

அன்னையின் அதே வார்த்தைகளைக் கூறி..!

உருப்படியான உதவி என்று...

முடிந்தவரை நானும் தாங்கியவாறே முன்சென்றேன்

**மனிதா..!**

உதவி என்பதை ஏட்டில் படித்து மறந்துவிட்டு

உபத்திரவம் என்பதை மட்டும் உள்வாங்கி

நாள்தோறும் செய்கிறோமே என்று மாறப்போகிறோம்

சிரேன் ஊர் சீமோனாய்.. பிறர்க்கு உதவி செய்ய..!

சிந்திப்போமா...

## செபம்

அன்பு இயேசுவே! உதவி தேடி வருவோரை உதறிவிட்டு, உபத்திரவம் நினைத்த தருணங்களை நினைத்து மனம் வருந்துகிறோம்.. இனியாவது, சிரேன் ஊர் சீமோனைப் போல பலன் எதிர்பாராது உதவி செய்திட வரம் தாரும்.. ஆமென்.

## ஆறாம் நிலை

## வெள்ளைத் துணியுடன் வெரோனிக்கா

அன்பிற்கு அணை போட முடியுமா...

அதான்.. அடித்துக் கொண்டு வருகிறது

ஒரு சுனாமி வெரோணிக்கா என்ற பெயரில்!

எச்சரிக்கைக் கொடியைத் தகர்த்து எறிந்துவிட்டு

அமைதிக் கொடியைக் கையிலேந்தி

ஆறாய் ஓடும் தம் அன்பனின் செந்நீர்

முகத்தை துடைக்க நினைக்க...

ஐயகோ.. என்ன இது..

பதிந்துவிட்டதே பரமனின் முகம் – என்று

பதறி அழுகிறாள்.. பாசமலர் வெரோணிக்கா

பெண்ணடிமை காலத்தில் இப்படியும் ஒரு

பெண்ணா.. இவள் யார்..!

எங்கிருந்து வந்தது இத்துணைத் துணிவு...

**நவீண காலத்து நங்கைகளே..**

உங்களில் யார்தான் வெரோணிக்கா..

**ஆண்களே...**

அந்த நங்கைக்கு இருந்த தைரியம்

உங்களுக்குத்தான் இருக்கிறதா..!

சிந்திப்போமா...

### செபம்

அன்பு இயேசுவே! நாங்கள் வாழும் இடங்களில் எத்தனையோ துன்பப்படும் உள்ளங்கள் இருந்தாலும் ஒரு ஆறுதல் வார்த்தைக் கூட சொல்லாது கண்டு கொள்ளாமல் இருந்த அனைத்து தருணங்களை நினைத்து மனம் வருந்துகிறோம்.. இனியாவது வீரமங்கை வெரோணிக்கா போல நாங்களும் பிறரின் துயர் துடைக்க நல் வரம் தாரும்.. ஆமென்.

## ஏழாம் நிலை

### பாரம் படுக்க வைத்துவிட்டது.. இரண்டாம் முறையாய்...

சுமையின் அழுத்தம்...

இமைகளின் நெருக்கம்!

கரங்களோ தயக்கம்...

கால்களோ நடுக்கம்!

உரசிவிட்டார் தாய்மண்ணை

உணர்ச்சியின்றி இரண்டாம் முறையாய்..!

இப்போதாவது இரக்கமுண்டா படைவீரர்களுக்கு...





இல்லை.. இல்லவே இல்லை…

சவுக்குகள் விளையாடுகிறது

சதைகள் பிய்த்துக் கொண்டு வருமளவுக்கு..!

சரீர வலி பொறுக்காமல்

சத்தம் இடுகிறார்… ஐயோ என்று..!

சவுக்கடிகளை குறைத்துக் கொள்ள

சாய்ந்த உடலை நிறுத்த முயற்சிக்கிறார்

முன்குறித்த திட்டத்தை முழுமையாக்க..!

**மானிடா…**

ஒரு முறை விழுந்தாலே

ஒடுங்கி விழும் நமக்கு

மறுமுறை விழத்தான் மனம் வருமா…

இல்லை.. விழுந்தால் எழத்தான் முயற்ச்சிப்போமா…

சிந்தித்துப்பார்…

### செபம்

அன்பு இயேசுவே! சாதாரணமாக தடுக்கி விழுந்தாலே எழச் சங்கடப்படும் எங்களுக்கு உமது முயற்சியும் எழுச்சியும் ஒரு பாடமாக அமைய வரம் தாரும். ஆமென்.

## எட்டாம் நிலை

### ஆறுதல் கூற வந்தவர்களுக்கே ஆறுதல்..!

வேடிக்கை கூட்டத்திலும் பெண்

வேங்கைகள் சிலர்..!

என்ன ஆச்சரியம்…

ஓ.. இவர்கள்தான் செய்நன்றி மறவாதவர்களோ..!

அதனால்தான் ஆறுதல் சொல்ல வந்திருக்கிறார்களோ..!

ஆனால் ஒரு முரண்பாடு அங்கே…

ஆறுதல் சொல்ல வந்தவர்களுக்கே ஆறுதல்

அளிக்கிறார் அன்பர் இயேசு!

அழுதது போதும் எனக்காக...

அழுவீர்களா உங்களுக்காக... உங்கள் பிள்ளைகளுக்காக...

பச்சை மரமே சாய்க்கப்பட்டுவிட்டது...

பட்டமரத்தின் கதி என்னவோ..!

**மனித குலமே..**

நன்றியுள்ளவர்கள் இருந்திருக்கிறார்கள்

நம்மிலும் – ஆனால்

இன்று இருக்கிறோமா...

சிந்திப்போம்!

### செபம்

ஆறுதலாம் இறைவா! நீர் செய்த நன்மைகளை நினைத்துப் பார்த்து உமக்கு ஆறுதலாவது கூறலாமே என்று முன் வந்தார்கள் எருசலேம் பெண்கள். ஆனால் நாங்கள், நீர் செய்த நன்மைகளை மறந்தவர்களாய் நன்றி கெட்டவர்களாய் இருக்கின்றோம்.. அதற்காக மனம் வருந்துகின்றோம்..! மனம் மாற உம் அருள் வேண்டுகிறோம்.. ஆமென்.

## ஒன்பதாம் நிலை

### குறையாத சுமைகள்.. குன்றிய உடல்...

### விழுகிறது மூன்றாம் முறையாய்!

இறைத்திட்டம் நிறைவேற்ற

திக்குமுக்காடி சென்றவர்க்கு

திடீர் சருக்கல்..

சரீரம் சரிந்துவிட்டது மூன்றாவது முறையாய்..!

தாய்மண்ணின் முத்தம்

தடித்த முட்களை அழுத்த...

தலைவனின் மூளை பதம் பார்க்கப்படுகிறது!

கிழிந்த உடல்கள் சூடான தரையில் ஒட்டிக்கொள்ள

சுருக்கென்று சுருண்டுவிட்டார் சுமைதாங்கி..!

காலம் கூடி வரவே...

கடவுளின் திட்டத்தை நிறைவாக்க – இரத்தக்

கண்ணீருடன் மெல்ல

எழுகிறார் – சொல்ல முடியாமல்..!

யாருக்கு வரும் இந்த தைரியம்..!

சிறுதுன்பம் வந்தாலே

நொடிந்து விடும் நாம்...

தொடர்ந்து வரும் வீழ்ச்சியில்

எழவாப் போகிறோம்...

அந்த சிலுவை மனிதன் போல..!

சிந்தித்துப்பார்...

### செபம்

விடாமுயற்சியின் வித்தகரே எம் இறைவா! இறைத்திட்டத்தை முழுமையாக்க மூன்று முறை விழுந்தாலும் எழுந்து சென்ற உம் விடாமுயற்சியை நினைத்து வியக்கிறேன். துன்பம் என்றாலே துவண்டு விடும் எங்களுக்கு உமது விடா முயற்சி ஒரு நல் பாடமாக அமைய வரம் தாரும்.. ஆமென்.



## பத்தாம் நிலை

## அவமானத்தின் உச்சக்கட்டம் நிர்வாணம்..

## ஏற்றுக் கொள்கிறார் இயேசு

கடும் வெயிலில் தத்தித் தத்தி
கல்வாரி வந்தவரை
சிலுவையை இறக்கிவிட்டு
சிறுமனிதாபிமானமும் இன்றி
சிவந்த உடலில் ஒட்டியிருந்த
சிவப்புத்துணியை..!
மானத்தைக் காத்த
மறைப்புத் துணியை உரிந்து விட்டார்கள்..!
என்ன கொடுமை!
மேலாடை கொடுக்கச் சொன்னவர்க்கே – சிறு
நூலாடை கூட இல்லை... இருப்பினும்
தாங்கிக் கொண்டார் அவமானத்தை !
அன்றைய நிர்வாணம்
பெரும் அவமானம்..!
இன்றைய நிர்வாணம்
தரும் வருமானம்..!
கைக்குட்டையை ஆடைக்குள்
வைத்த காலம் போய்..
கைக்குட்டையே ஆடையாய்
மாறிய காலம் வந்துவிட்டது..!
எந்தக் காலத்தில் நாம்...?

நிர்வாணம் என்பது உடல் ஆடையில்
மட்டும்தானா...?
உனது சுயநலத்திற்காக – பிறரின்

அமைதி எனும் ஆடையைப்

பிடுங்கிக் கொண்டாயே...

இதுவும்தானே நிர்வாணம்..!

ஆறறிவு ஜீவி

அம்மனமாய் வீதியில் நிற்க..!

நான்கறிவு ஜீவிக்கு

நயமான சில்க் உடை நடுவீட்டில்!!!

என்ன கொடுமை.. எங்கே நீதி..?

இரண்டிருந்தால் ஒன்று கொடு – இது

பிறர்நல வார்த்தை..!

இரண்டிருந்தாலும் இல்லையென்று சொல் – இது

சுயநல வார்த்தை...

இவற்றில் உனது வார்த்தை எப்படி..சிந்திப்பாயா..!

**செபம்**

அன்பு இயேசுவே! ஆடை அளிக்க முன்வந்த உம்மையே நிர்வாணப்படுத்தி நிந்தித்த எங்களின் இழிநிலையை நினைத்து மனம் வருந்துகிறோம். இனியாவது, நாங்கள் பிறரை, அவர்களின் அமைதி எனும் ஆடையை உரிந்து அவமானப்படுத்தாமல் அன்பு எனும் ஆடையைப் போர்த்தி பிறர் நலம் பேண வரம் தாரும்.. ஆமென்.

## பதினொன்றாம் நிலை

### பச்சைமரத்தில் பதிக்கப்படுகிறது.. பயங்கரமான ஆணிகள்

சிவந்த குருசினை சீராகப் படுக்கவைத்து

நிர்வாணமாய் நின்றவரை

நிரந்தரமாய் படுக்க வைக்கும் நோக்கில்

சிலுவையில் சேர்த்து வைக்க..

வலு கொண்ட சுத்தியலும் ஆணிகளும்

வலுவற்ற மனிதரின் கை கால்களில்

குழி பறித்து விளையாட

ஊற்றெடுக்கிறது குருருதிகள் பல.

அந்தோ மனிதன்...

அலறுகிறார் வலி தாங்க முடியாமல்..!

தேவையா இவருக்கு...

குத்தப்பட வேண்டியது யார்..?

நீயும் நானும்தானே...

அன்று பெருத்த ஆணிகள் குத்தின..!

இன்று வார்த்தை ஆணிகள் குத்துகின்றன..

அன்றும் இன்றும் குத்தப்படுவது

அடுத்தவர்கள்தான்...

அப்படியானால் குத்துவது யார்..? கண்டுபிடி...

துப்பு வேண்டுமானால்

முகக்கண்ணாடியின் முன் போய் நின்று பார் !

விடை கிடைக்கும்..!

## செபம்

அன்பு இயேசுவே! அன்று கூறிய ஆணிகளால் உம்மை குத்திய நாங்கள் இன்று எங்கள் தீய வார்த்தைகளால் பலரைக் குத்திக் கொண்டு இருக்கிறோம். இதற்க்காக மனம் வருந்துகிறோம்.... இனிமேலாவது எங்கள் வார்த்தைகள் பிறரைக் குத்தும் ஆணிகளாக இல்லாமல் நல்மருந்தாய் அமைந்திட அருள் புரியும்.. ஆமென்.

## பன்னிரெண்டாம் நிலை

### விதை மடிந்து விட்டது... விருட்சமாவதற்கு

குற்றமற்ற மனிதர்
குருசினில குருதி சிந்த
தொங்குகிறார்...
தொடங்கிய பணியை முடித்து வைக்க..!
படைப்புகளுக்கே பொறுக்கவில்லை
பரமன் படும் வேதனை
கதிரவன் ஒளி இழந்துவிட்டான் நண்பகலில்...
இடியும் மின்னலும் அலறுகின்றன...
இறைமகனுக்கா இந்நிலை என்று !
திருப்பீடத் திரையே இரண்டாக
கிழிந்துவிட்டது – மறைப்பதற்கு இனி
ஒன்றுமில்லை என்று..!
கரியவனின் ஆட்டம் கலைகட்டத்
தொடங்கிவிட்டது...
பாவம் தூய மனிதன்..!
கடைசி மூச்சினைப் பிடித்துக் கொண்டவராய்
கடவுளே கை விட்டாயே என்று
கதறுகிறார் மனித வலுவின்மையால்..!
இந்நிலையிலும் கூட...
திருந்தா திருடனின் ஏச்சினை ஏற்றுக் கொண்டு
திருந்திய கள்வனுக்கு விண்வாழ்வு அளிக்கிறார்...
தன்நிலைக்குக் காரணமானவர்களை
தயை கூர்ந்து மன்னிக்கிறார்...
அப்பப்பா...
மரண வேளையிலும்

மன்னிக்கும் மனமா…

எவருக்கு வரும் இந்த

துனிச்சல் நிறைந்த மனசு!

வாழ்வு தரும் தண்ணீருக்கே

வறண்ட நிலை..!

வாய்விட்டு கேட்டுவிட்டார்

தண்ணீர் என்று..!

வழங்கினார்கள் புளித்தக்காடியை

புத்தி கெட்ட கயவர்கள்..!

இனியும் தாங்காது என எண்ணி

இறைவன் கொடுத்த ஆவியை

இறைவனிடமே கொடுத்துவிட்டார்

தந்தையே உம் கைகளில் என்

ஆவியை ஒப்படைக்கின்றேன் என்று..!

**நண்பா…**

உனக்காக எனை இழந்தேன்

எனக்காக நீ எதை இழப்பாய்..!

பொன்னா..! பொருளா..!

இரண்டும் வேண்டாம்!

உன்னை இழ…

அது போதும் எனக்கு!

இழந்தேனே இழப்பாயா..!

## செபம்

அன்பு இயேசுவே! எங்கள் பாவங்களால் உம்மைக் கொன்றதற்காக மனம் வருந்துகிறோம். இழப்பதில்தான் நிறைவு





உண்டு என்று நீர் வாழ்ந்து காட்டிய வழியில் நாங்களும் வாழ எங்களையே இழக்க வரம் தாரும்.. ஆமென்.

## பதிமூன்றாம் நிலை

### தாயின் மடிதான் உலகம்

குருதியும் நீரும்
பீறிட்டு வந்த உடல்
இறக்கி வைக்கப் படுகிறது
இறை அன்னையின் மடியில்.
உயிரோடு மடியில் விளையாடிய
குழந்தையை...
உயிரற்ற நிலையில் மடியில் சுமக்கும் போது
எந்தத் தாய்க்குத்தான் வராது கண்ணீர்..!
வந்தது இந்த அன்னைக்கும்...
ஆனால் இது
அல்லல் கண்ணீர் அல்ல...
ஆனந்தக் கண்ணீர்.
தான் கொடுத்த தாய்ப் பாலை
தன் மகன் – இத்
தரனிக்கே இரத்தமாய்
தந்துவிட்டதை எண்ணி
அக்களிப்பு அடைகிறாள்
அளித்த பால் வீணாக வில்லையென்று..!
கருவறையில் இருந்து
கல்லறைவரை – பல
வியாகுலங்கள் அனுபவித்தாலும்
விட்டுவிடவில்லை இறைத்திட்டத்தை

சும்மாவா சொன்னார்கள்...

ஈன்ற பொழுதினும் பெரிதுவர்க்கும் தன்மகனைச்

சான்றோன் எனக் கேட்டதாய்!

**தம்பி..**

என் அன்னையை கேட்க வைத்துவிட்டேன் நான்

சான்றோன் என்று!

உன் அன்னையை கேட்கச்

செய்தாயா – அதே வார்த்தையில்!

என்று கேட்கப் போகிறாள் உன் அன்னை...

நீ சான்றோன் என்று!

## செபம்

அன்பு இயேசுவே! உம் தாய் ஊட்டிய பாலுக்கு அதன் பலனை நீர் பெற்றுத் தந்துவிட்டீர். ஆனால் நாங்கள் என்று பலன்தரப் போகிறோம் எங்கள் தாய் ஊட்டிய பாலுக்கு... வரம்தாரும் இயேசுவே... ஆமென்.

## பதிநான்காம் நிலை

### ஆறடி நிலம் கூட சொந்தமில்லை அடக்கம் செய்கிறார்கள் அடுத்தவர் கல்லறையில்..!

அன்னையின் மடியில் அன்புடன்

அமர்த்தப்பட்டவர் – கீழ் நோக்கி

இறக்கப்படுகிறார்

இறுதி சடங்கிற்காக!

பிறப்பிலும் சரி

இறப்பிலும் சரி

